**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE.**

**TIRUVANNAMALAI.**

**S.C. NO. 112/2018**

**PW9**

| | | |
|---|---|---|
| Name | : | கிருபானந்தன் |
| Father's/Husband's Name | : | முருகேசன் |
| Village | : | |
| Taluk/District | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 25.04.2025

A1 and 2 present.

**முதல் விசாரணை**

நான் தமிழ்நாடு காவல் துறையில் பணிபுரிந்து , பணிநிறைவு பெற்று தற்போது திருவண்ணாமலையில் குடியிருந்து வருகிறேன். கடந்த 28.05.2016 ல் கீழ்பென்னாத்தூர் காவல் நிலைய உதவி ஆய்வாளராக பணிபுரிந்தபோது நாரியமங்கலம் கிராமத்தை சேர்ந்த மணிமேகலை என்பவர் நிலையம் ஆஜராகி புகார் கொடுத்தார். அந்த புகாரை பெற்று நிலைய குற்ற எண்.170/2016 U/s 294(b), 341,323,307 IPC ன் படி வழக்கு பதிவு செய்தேன். நான் பதிவு செய்த முதல் அறிக்கை அ.சா.ஆ. 11. புகார் மனு மற்றும் முதல் தகவல் அறிக்கை இணைத்து நீதித்துறை நடுவர் 2 திருவண்ணாமலைக்கு அனுப்பிவைத்தேன். இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

கீழ்பென்னாத்தூர் காவல் நிலையம் பேருந்து நிலையத்தில் இருந்து சுமார் 100 அடிக்கு மேல் இருக்கும். கீழ்பென்னாத்தூர் காவல் நிலையத்தில் இருந்து நீதித்துறை நடுவர் 2 அவர்களின் இல்லம் சுமார் 15 கி.மீ தூரத்தில் உள்ளது என்றால் சரிதான். 28.05.2016 அன்று மாலை 08.15 மணிக்கு தான் முதல் தகவல் அறிக்கை நீதித்துறை நடுவரிடம் ஒப்படைக்கப்பட்டது என்றால் சரிதான். இந்த காலதாமதத்திற்கு காரணம் நான் முதல் தகவல் அறிக்கை சொன்ன நேரத்தில் பதிவு செய்யாததுதான் என்று சொன்னால் சரியல்ல. புகாரை புகார்தாரர் மணிமேகலை எழுதவில்லை என்றும், எங்கள் காவல் நிலையத்தில் இருந்த ஜகந்நாதன் என்பவர் எழுதினார் என்றால் சரியல்ல. இந்த புகார் எங்கள்காவல் ஆய்வாளரின் ஆலோசனை பெற்று ஜகந்நாதன் என்பவரை வைத்து காவல் நிலையத்தில் தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கையில் எதிரிகள்

கத்தியை கொண்டு இறந்த நபரை தாக்கியதாக வாசகங்கள் இல்லை என்றால் சரிதான் . புகாரில் 1 வதுஎதிரி "என்றைக்காவது என் கணவரை சாகடித்து விடுவேன் என்று கூறிவந்தார் " என்ற வாசகமும் இல்லை என்றால் சரிதான் . புகாரில் என் கணவரை பல அடிகள் அடித்தார் என்றும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான் . அருண்சுந்தரபாண்டியன் சம்பவ இடத்தில் இருந்ததாகவும் புகாரில் இல்லை என்றால் சரிதான் . சம்பவ நடந்ததாக கூறப்படும் இடத்தில் இருந்து திருவண்ணாமலை மருத்துவக்கல்லூரி மருத்துவமனை சுமார் 15 கி.மீ தூரத்தில் உள்ளது என்றால் சரிதான். 27.05.2016 அன்று மணிமேகலை மருத்துவமனையில் கொடுத்த வாக்குமூலம் திட்டமிட்டு மறைக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல . புகாரில் குறிப்பிட்டுள்ளவாறு எதிரிகளோ அல்லது இளஞ்சிறாரோ எந்த குற்ற சம்பவத்திலும் ஈடுபடவில்லை என்றால் சரியல்ல . இறந்து போன செல்வம் என்பவர் பல்வேறு இடங்களில் காயம்பட்டு மதுபோதையில் தண்ணீர் பள்ளத்தில் விழுந்து ஏற்பட்ட காயத்தை வைத்து உண்மை தன்மையை மறைத்து புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.

**Sd/- B. C. Gopinath**
Additional District Judge,
Tiruvannamalai.